1979 ஏப்ரல் 9]

தொப்பையாற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 675— திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் எல்லையில் உள்ள தொப்பையாற்றின் குறுக்கே கட்ட இருக்கும் தரைப் பாலத்தை மாற்றி மேம்பாலமாக கட்ட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தர்மபுரி மாவட்ட எல்லையில் அணுகக்கூடிய தொப்பையார் ஆற்றுக் குறுக்கே கட்டப்பட்ட பாலம் மிக மிக முக்கியமானது. அது வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் கொடுக்கப்பட்ட கோரிக்கையாகும். அப்போது இருந்த போக்குவரத்திற்கு ஏற்ப அந்தப் பாலம் இருந்தது. இப்போது போக்குவரத்து அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்தப் பாலத்தை உயர்த்தி நல்ல முறையில் அமைத்துத் தரவேண்டும் என்று வேண்டுகிறேன். எந்த அளவிற்குச் செலவு செய்து அது செய்யப்படும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தர இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலத்தின் அவசியத்தை உணர்ந்த காரணத்தால் அரசு உயர் மட்ட பாலம் ஒன்று கட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த உயர் மட்ட பாலம் கட்டுவதற்கு ரூ.3,92,936-ம் அணுகு சாலை குறுக்கே செய்யவேண்டிய வேலைகளுக்கும் ரூ. 1,95,649-ம் செலவிட்டு அந்தத் திட்டத்தை ஒப்பந்தக்காரருக்கு விட்டு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது.

(முற்பகல் 9.30.)

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தொப்பை ஆற்றில் கட்டப்பட இருக்கின்ற தரைப் பாலத்தினுடைய உயரம் என்ன ? இதனுடைய மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இது தரைப்பாலம் அல்ல. உயர் மட்ட பாலம்.